**செய்தி வெளியீடு எண் : 2001** **நாள் : 11.11.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.11.2022) திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக 36-வது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை**

இந்திய ஒன்றியத்தின் மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே,

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்களே,

மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர் திரு. எல்.முருகன் அவர்களே,

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி உள்ளிட்ட தமிழக அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு அலுவலர்களே,

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கே.எம். அண்ணாமலை அவர்களே,

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மித் சிங் அவர்களே,

பேராசிரியர் பெருமக்களே,

என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே,

கிராமப்புற கல்வி மேம்பாட்டிற்கான அறிவாலயமாகத் திகழும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

குஜராத்தில் பிறந்து, ஒற்றுமையையும் சமூக நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி இந்திய தேசத்தின் தந்தையாக வலம் வந்த அண்ணல் காந்தியடிகளுக்கும் தமிழ்நாட்டுக்குமான தொடர்பு மிக மிக அதிகம்.

தனது வாழ்நாளில் 26 முறை தமிழ்நாட்டிற்கு வருகை தந்த காந்தியடிகள் அவர்கள் - தமிழை விரும்பிக் கற்றவர். மோ.க.காந்தி என்று தமிழில் கையெழுத்து இட்டவர். திருக்குறளைப் படிப்பதற்காகவே தமிழ் கற்க வேண்டும் என்று சொன்னவர்.

